**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 17 ம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, குரோதி வருடம் பங்குனி மாதம் 3 ம் நாள்
**இ.ம.எண். 1/2025**
**இல்**
**அசல் வழக்கு எண். 84/2022**

பாலு .. மனுதாரர்/1ம் பிரதிவாதி

//எதிர்//

1. சாவித்திரி
2. ராமசாமி
3. தேவசேனா
4. உஷா
5. பாலகிருஷ்ணன் ..எதிர்மனுதாரர்கள்/ வாதி 2 முதல் 5 பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 10.03.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் வழக்கறிஞர் திரு. K. இளையராஜா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. G. ராஜேஷ் அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்களை பரிசீலித்தபின் இன்று 17.03.2025 இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது, மனுதாரர் தரப்பில் PW1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய ரீகால் செய்து உத்தரவு பிறப்பிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:**

2. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவார். 1ம் எதிர்மனுதாரர் தனக்கு எதிராக பாகப்பிரிவினை வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், தான் இவ்வழக்கில் ஆஜராகி விரிவான எதிர்வழக்குரையும் தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் PW1 சாட்சி விசாரணை செய்யப்பட்டு தனது தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என கடந்த 29.08.2024 அன்று முடிக்கப்பட்டுள்ளது என்றும், தனது தரப்பில் PW1சாட்சியினை வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ குறுக்கு விசாரணை செய்யாமல் இருக்கவில்லை என்றும், அன்றைய தினம் தனக்கு வயது முதிர்வின் காரணமாக

உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டதாகவும், அதுமட்டுமல்லாமல் இவ்வழக்கிற்கு அவசியமான சில ஆவணங்களை பத்திர பதிவுத்துறையில் கிடைக்க வேண்டி மனுதாக்கல் செய்திருந்ததால் தன்னால் மேற்படி தேதியில் PW1சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முடியவில்லை என்றும், இவ்வழக்கில் PW1 சாட்சியை தனது தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது அவசியமானது என்றும், எனவே, PW1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய ரீகால் செய்து உத்தரவு பிறப்பிக்க கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**எதிருரையின் சுருக்கம்:**

3. இம்மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர் அபிடவிட்டில் சொல்லியுள்ள விபரங்கள் உண்மையல்ல என்றும், மனுதாரர் வேண்டுமென்றே குறுக்கு விசாரணை செய்யாமல் இருந்த நிலையில் தற்போது மனு கொடுத்து விசாரணை கோருவது ஏற்புடையதல்ல என்றும், வாதியை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய 14.03.2024, 01.04.2024, 24.06.2024, 04.07.2024, 15.07.2024, 01.08.2024, 22.08.2024, 29.08.2024 ஆகிய தேதிகளில் வாய்தா போடப்பட்டு மேற்கண்ட தேதியில் இந்த எதிர்மனுதாரரின் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றும், 29.08.2024 அன்று 1ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் முன்னிலையாகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை என முடிக்கப்பட்டதாகவும், எதிர்மனுதாரர் அவரது பெற்றோர்கள் சொத்தில் பாகம் கிடைக்கக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர்/1ம் பிரதிவாதி செயல்பட்டு வருவதால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே, இம்மனுவினை கூடுதல் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறியுள்ளார்.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது, இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**<u>தீர்வு:</u>**

5. மனுதாரர் தரப்பில், 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக பாகப்பிரிவினை வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அந்த வழக்கானது

வா.சா.1 சாட்சி விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை இல்லை என கடந்த 29.08.2024 அன்று முடிக்கப்பட்டுள்ளது என்றும், அன்றைய தினம் மனுதாரருக்கு வயது முதிர்வின் காரணமாக உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டதாகவும், அதுமட்டுமல்லாமல் இவ்வழக்கிற்கு அவசியமான சில ஆவணங்களை பத்திர பதிவுத்துறையில் கிடைக்க வேண்டி மனுதாக்கல் செய்திருந்ததால் மனுதாரரால் மேற்படி தேதியில் வா.சா.1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முடியவில்லை என்றும், வா.சா.1 சாட்சியை தனது தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது அவசியமானது என்றும், எனவே, வாதி தரப்பு சாட்சியத்தை மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர் வேண்டுமென்றே குறுக்கு விசாரணை செய்யாமல் இருந்த நிலையில் தற்போது மனு கொடுத்து விசாரணை கோருவது ஏற்புடையதல்ல என்றும், வாதியை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய பல வாய்தா போடப்பட்டும் எதிர்மனுதாரரின் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றும், 29.08.2024 அன்று 1ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் முன்னிலையாகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை என முடிக்கப்பட்டதாகவும், எதிர்மனுதாரர் அவரது பெற்றோர்கள் சொத்தில் பாகம் கிடைக்கக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர்/1ம் பிரதிவாதி செயல்பட்டு வருவதால் இம்மனு தாக்கல் செய்துள்ளதால் இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

8. மனுதாரர் தரப்பில், 29.08.2024 மனுதாரருக்கு வயது முதிர்வின் காரணமாக உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டதாகவும், அதுமட்டுமல்லாமல் இவ்வழக்கிற்கு அவசியமான சில ஆவணங்களை பத்திர பதிவுத்துறையில் கிடைக்க வேண்டி மனுதாக்கல் செய்திருந்ததால் மனுதாரரால் மேற்படி தேதியில் PW1சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முடியவில்லை என்றும், எனவே, வாதி தரப்பு சாட்சியத்தை மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் அவரது பெற்றோர்கள் சொத்தில் பாகம் கிடைக்கக்கூடாது என்ற கெட்ட

எண்ணத்தில் மனுதாரர்/1ம் பிரதிவாதி செயல்பட்டு வருவதால் இம்மனு தாக்கல் செய்துள்ளதால் இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது. இந்த அசல் வழக்கானது வாதி தரப்பு சாட்சியின் விசாரணை முடிக்கப்பட்டு குறுக்கு விசாரணை இல்லை என 29.08.2024 அன்று முடிக்கப்பட்டுள்து. இந்நிலையில் வாதியை மீண்டும் அழைத்து மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்று கோரியுள்ளார். மனுதாரர் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவையாக உள்ளது என நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், மனுதாரருக்கு அவரது தரப்பு வழக்கை நிரூபிக்க போதிய வாய்ப்பு அளிப்பதே நீதி நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆனால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட காலவிரயத்தை கணக்கில் கொள்ளும்போது இந்த மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**9. முடிவாக, மனுதாரர், எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகையாக ரூ. 500/– கொடுக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 17.03.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

ஒப்பம் (P. கனிமொழி)

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**

இணைப்பு :

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

ஒப்பம் (P. கனிமொழி)

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**